தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.04.2013 A.M**

---

## காய்கறிகளின் வரத்து குறைவால் கோயம்பேடு மார்க்கெட்டில் விலை 2 மடங்கு உயர்வு

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காய்கறிகளின் வரத்து குறைந்ததால் பீன்ஸ், அவரைக்காய் போன்றவற்றின் விலை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும், திருவண்ணாமலை, விழுப்புரம், காஞ்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும் காய்கறிகள் அதிகளவில் வருகின்றன.

விலையில் ஏற்ற இறக்கம்: தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், மழை மற்றும் பனியின் அளவு குறைந்ததாலும் காய்கறிகளின் விளைச்சல் பெருமளவு குறைந்துள்ளது. அதனால், காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வார காலமாக காய்கறிகளின் விலையில் ஏற்ற, இறக்கங்கள் நிலவி வந்தன. ரூ.20-க்கு விற்கப்பட்டு வந்த ஒரு கிலோ பீன்ஸ், வியாழக்கிழமை ரூ. 70-க்கு விற்கப்பட்டது. அதேபோல் கிலோ ரூ. 25-க்கு விற்கப்பட்டு வந்த அவரைக்காய் ரூ. 50-க்கு விற்கப்பட்டது.

விலை உயர்வு குறித்து கோயம்பேடு மார்க்கெட் சங்க நிர்வாகி சௌந்தர்ராஜன் கூறியது: தற்போது கோடை விடுமுறை தொடங்கி இருப்பதால் அதிகளவில் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கும், மற்றவர்கள் விடுமுறையைக் கொண்டாடுவதற்கு சுற்றுலாத் தலங்களுக்கும் செல்கின்றனர்.

அதனால் தேவை குறைந்திருப்பதால் தற்போதைய விலை தொடர்ந்து நீடிக்கும். ஆனால், காய்கறிகளின் தேவை அதிகரிக்கும் போது அதிகளவில் விலை உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றார் அவர்.

**வியாழக்கிழமை விலை நிலவரம் (பழைய விலை அடைப்புக்குள்):**

பீன்ஸ் - ரூ. 70 (20)

அவரைக்காய் - ரூ. 50 (25)

சேப்பங்கிழங்கு - ரூ. 30 (22)

பச்சைமிளகாய் - ரூ. 30 (15)

தக்காளி - ரூ. 25 (15)

செப்செப்க்காய் - ரூ. 30 (15)

கத்தரிக்காய் - ரூ. 25 (12)

பீட்ரூட் - ரூ. 20 (10)

மேலும் முருங்கைக்காய், முள்ளங்கி, புடலங்காய், பெல்லாரி வெங்காயம், உருளைக்கிழங்கு, கொத்தவரங்காய் உள்பட சில காய்கறிகளின் விலை பழைய விலையிலே விற்கப்படுகிறது என்று கோயம்பேடு மார்க்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தோட்டக்கலைத் துறை அலட்சியம்: வீணாகும் உயிர் உரம்

புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு வழங்குவதற்காக சாத்திப்பட்டு கிராமத்தில் இறக்கிவைக்கப்பட்டுள்ள உயிர் உரங்கள் சாலையில் பாதுகாப்பின்றியும், வெயில் மற்றும் மழையில் நனைந்து சேதம் அடைகிறது.

கடந்த 2011-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ஆம் தேதி கடலூர் மாவட்டத்தை தானே புயல் தாக்கியது. இதில் முந்திரி, மா, பலா, தென்னை உள்ளிட்ட பல ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. மரங்களை நம்பியே வாழ்க்கை நடத்தி வந்த பண்ருட்டி மற்றும் அண்ணா கிராமம் ஒன்றியப் பகுதியை சேர்ந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தின் ஆணி வேரையே புயல் அசைத்துவிட்டது.

புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் தமிழக அரசு தோட்டக்கலைத் துறை மூலம் பல்வேறு திட்டங்களும், நிவாரண உதவிகளை அறிவித்தது. பாதிக்கப்பட்ட முந்திரி மரங்களை அகற்றிவிட்டு நடவு செய்ய வீரிய ரக முந்திரி கன்றுகளை இலவசமாக வழங்கியது. மேலும் ஹெக்டருக்கு ரூ.6,800 நிவாரணமும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.இதனிடையே ஊடு

பயிர் செய்ய உளுந்தும், உயிர் உரங்களும் வழங்கப்படும் என அறிவித்ததாகக் கூறப்படுகிறது. இதற்காக சாத்திப்பட்டு மாதா கோயில் எதிரில் 75-ம் மேற்பட்ட மூட்டை உயிர் உரங்கள் சாலை ஓரத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. உரிய பாதுகாப்பின்றி சாலையில் வைக்கப்பட்டுள்ள இந்த உயிர் உரங்கள் மழை, வெயில் மற்றும் பனியில் கிடந்து சேதம் அடைந்து வருவதாகவும், இதனால் உயிர் உரத்தின் வீரியம் குறைந்து போகும் என விவசாயிகள் வேதனையுடன் கூறினர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் திட்டங்கள் முறையாக உரிய காலத்தில் கிடைப்பதில்லை எனவும், அரசு அதிகாரிகளின் அலட்சியம் இதற்கு காரணம் என குற்றம்சாட்டுகின்றனர்.

இதுகுறித்து அண்ணாகிராமம் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் பிரேமா கூறியது: அண்ணா கிராமத்தில் 650 ஏக்கர் முந்திரி காடுகள் பாதிக்கப்பட்டன. இதில் பாதிக்கப்பட்ட 300 முந்திரி விவசாயிகளுக்கு 11,770 வீரிய ரக முந்திரி கன்றுகள் நடவுக்காக வழங்கப்பட்டுள்ளன. ஊடுபயிர் செய்ய ஏக்கருக்கு 8 கிலோ உளுந்தும் உயிர் உரம் வழங்க வேண்டும். உளுந்து விதை வர தாமதமானதால் உயிர் உரம் வழங்கப்படவில்லை. காலாவதி காலம் உள்ளதாலும், பாலிதீன் பையில் உயிர் உரங்கள் அடைக்கப்பட்டுள்ளதால் வெயில், மழை மற்றும் பனியால் வீரியம் குறைய வாய்ப்பில்லை. உளுந்து விதை 1,200 கிலோ வந்துள்ளதாகவும், ஒரு சில நாட்களில் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் ஆடிப்பட்டத்தில் விதைக்க உரிய காலத்தில் விதை வழங்கப்படும் என்றார்.

## உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு நல உதவி

கச்சிராயப்பாளையத்தில் புதன்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் 92 விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பிருந்தாதேவி தலைமை வகித்தார். எம்.எல்.ஏ க.அழகுவேலு பாபு முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் ஜி.கோவிந்தன் வரவேற்றார்.

ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன், 92 விவசாயிகளுக்கு வேளாண்மை அலுவலக வளாகத்தில் ரூ.9 லட்ச மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை அமைச்சர் பார்வையிட்டார். வேளாண் உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள், விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

நிகழ்ச்சியில் பேரூராட்சித் தலைவர் வெங்கடேசன், ஒன்றியக்குழுத் தலைவர் அ.இராஜசேகர், சர்க்கரை ஆலை ஆட்சியர் சிவமலர், வேளாண்மை அலுவலர்கள் வேல்முருகன், ஆனந்தி, வேளாண்மை பொறியியல் துறை கணேசன், மீன்வளத்துறை கந்தசாமி, பட்டு வளர்ச்சித்துறை மாதேசன், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகம் நாகராஜன், தோட்டக்கலைத்துறை ராமன், கால்நடை வளர்ப்புத்துறை மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

அதிருப்தி தந்த அறுசுவை உணவு: உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இது பெயரளவிற்கே வழங்கப்பட்டது. வடைக்கு பதிலாக போண்டா வழங்கினர். பாயாசம் வழங்கவில்லை. கலவை சாதம் ஒன்று மட்டுமே வழங்கப்பட்டது. இதனால் விழாவிற்கு வந்த விவசாயிகள் பலர் அதிருப்தி தெரிவித்தனர்.

உளுந்தூர்பேட்டை, ஏப்.25: திருநாவலூர் ஒன்றியம் பரிக்கல் கிராமத்தில் வேளாண்துறை சார்பில் உழவர் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

திருநாவலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவநாதன் தலைமை வகித்தார். விழுப்புரம் வேளாண்மை உதவி இயக்குநர் எல்.அன்பழகன், புதிய வேளாண்மை தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் மற்றும் உயர்ந்த லாபம் எடுப்பது குறித்து விளக்கவுரையாற்றினார்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் பழனிச்சாமி, சிவக்குமார், ஜோதிராமலிங்கம், பழனிவேல் ஆகியோர் மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி, தரமான விதை தேர்வு, உளுந்து பயிருக்கு டிஏபி தெளிப்பு, வாழை கரனை நேர்த்தி ஆகிய செயல் விளங்கங்களை நேரடியாக செய்து காண்பித்தார். ஒன்றிய கவுன்சிலர் தேவிகா பழனி, ஊராட்சி மன்றத்தலைவர் அஞ்சலை சக்கரபாணி, அட்மா தொழில்நுட்ப மேலாளர் கவிதா உட்பட பலர் கலந்துகொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் ஜெயராமன் நன்றி கூறினார்.

செஞ்சி, ஏப்.25: வல்லம் வட்டாரத்தில் வேளாண்மைத்துறையின் கீழ் பண்ணைப் பயிர் மேலாண்மைத்திட்டம் புதியதாக தொடங்கப்பட உள்ளது.

விவசாயிகளிடம் இருந்து அடிப்படை புள்ளி விவரங்களை பெற்று சம்பந்தப்பட்ட விளைநிலங்களின் மண் மாதிரிகள் சேகரம் செய்யப்படுகின்றன.

விவசாயிகளின் பெயர், முழு முகவரி, நில சர்வே எண், பரப்பு, பயிரிடும் பயிர், வங்கி கணக்கு எண், அலை பேசி எண், சார்ந்துள்ள குழு விபரம் உள்ளிட்ட புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இவை அனைத்தும் பண்ணைப்பயிர் மேலாண்மைத்திட்டம் வலைதளத்தில் பதிவு செய்யப்படுகின்றன. விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பங்கள் கணினி தொடு திரை மூலமாகவும், அலைபேசி குரல் வழியாகவும், குறுஞ்செய்திகளாகவும் வழங்கப்பட உள்ளன. இதற்காக ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு அடையாள எண் கொடுக்கப்பட்டு, அதற்கான ஒருங்கிணைந்த விவசாயி கையேடு வழங்கப்படுகிறது.

வல்லம் வட்டாரத்தில் ஆனத்தூர் கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில், விவசாயிகளுக்கு இந்த கையேடுகளை ஒன்றியக்குழுத்தலைவர் கா.அண்ணாதுரை வழங்கினார்.

அட்மா திட்ட தலைவர் பன்னீர்செல்வம் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர், உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பண்ணைக் குட்டைகள் அமைத்துமீன் வளர்க்க விவசாயிகளுக்கு மானியம்

பல்நோக்கு பண்ணைக் குட்டைகள் அமைத்து, மானியத்துடன் மீன் வளர்க்க ஆர்வமுள்ள விவசாயிகள் மீன்வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் பல்நோக்கு பண்ணைக் குட்டைகள் அமைத்து, அதில் மீன் வளர்க்க ரூ.23 ஆயிரம் மானியமாக மீன்வளத் துறை வழங்க உள்ளது.

இதன்படி, மதுரை மாவட்டத்தில் விவசாயிகளின் நிலத்தில் தலா 2,500 சதுர மீட்டர் பரப்பில் 25 பண்ணைக் குட்டைகளுக்கு அனுமதி வழங்கப்பட உள்ளது. இந்த பண்ணைக் குட்டைகள் வெட்டப்படும் நிலம் களிமண் பாங்காகவும், நீர் ஆதாரம் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

இவற்றில் வளர்ச்சி அடைந்த பெருங்கெண்டை இன மீன் குஞ்சுகள் இருப்பு செய்து, 8 மாத கால வளர்ப்பில் 1000 கிலோ மீன் உற்பத்தி செய்யலாம்.

இத் திட்டத்தில் தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு, மீன் வளர்ப்பு குறித்து இரு நாள்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மீன் வளர்ப்பில் ஆர்வம் உள்ள, நில மற்றும் நீர்வசதி கொண்ட விவசாயிகள் தங்களது ஆவணங்களுடன் மீன் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம்.

மேலும் இது தொடர்பான விவரங்களுக்கு 0452-2347200 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## நெல் சாகுபடி பயிற்சி முகாம்

வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ், திருந்திய நெல் சாகுபடி பற்றிய மாவட்ட அளவிலான பயிற்சி கோவிலாங்குளம் வேளாண்மை பல்கலைக்கழக வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 2 நாள்கள் நடைபெற்றது.

வட்டார தொழில் நுட்பக்குழு ஒருங்கிணைப்பாளர் நாச்சியா வரவேற்று, அட்மா திட்டப் பணிகள் பற்றி பேசினார். வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர் பால்பாண்டி திருந்திய நெல் சாகுபடியின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றி விளக்கினார். திருந்திய நெல் சாகுபடியின் உழவியல் தொழில்நுட்பங்கள் பற்றி முனைவர் செல்லையா விளக்கிக் கூறினார். 1 ஏக்கர் நடவு செய்யத் தேவையான விதையளவு, சென்ட் நாற்றங்கால் பற்றியும், மார்க்கர் கருவியின் உபயோகம் பற்றியும் கூறினார். மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ராஜாராம் பேசும்போது, திருந்திய நெல் சாகுபடியில் நடவு செய்யத் தேவையான நாற்றின் வயது மற்றும் பூச்சி தாக்குதல் பற்றிக் கூறினார்.

முனைவர் மாரீஸ்வரி பேசும்போது, திருந்திய நெல்சாகுபடியில் நோய் தாக்குதலும், அதனை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும், இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தேவையான தழைச் சத்தினை மேல் உரமாக இடுவது பற்றியும் விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரேமா நன்றி கூறினார். ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப வல்லுனர்கள் செய்திருந்தனர்.

## நஞ்சநாடு கிராமத்தில் உழவர் பெருவிழா

உதகை அருகேயுள்ள நஞ்சநாடு கிராமத்தில் உழவர் பெருவிழா புதன்கிழமை நடைபெற்றது.

தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் மீராபாய் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊர்த் தலைவர் நஞ்சன், ஊராட்சித் தலைவர் குப்புசாமி, முன்னாள் ஊராட்சித் தலைவர் பாம்பா கவுடர், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் டாக்டர் சாந்தி, கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் முல்லை செல்வன், டாக்டர் என்.எஸ்.லட்சுமணன், வேளாண் பொறியியல் துறை சார்பில் வேலுசாமி, விதை ஆய்வாளர் லாவண்யா, உபாசி சார்பில் மகாலிங்கம், மீன்வளத் துறை சார்பில் பாஸ்கரன், ராமன், உதவி வேளாண் அலுவலர் போஜன், தெளிப்பு நீர்ப் பாசன நிறுவனம் சார்பில் மகேஷ்குமார், பூச்சிக்கொல்லி மருந்துகள் நிலையம் சார்பில் பாபு ஆகியோர் பங்கேற்றனர்.

உழவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கி, தோட்டக்கலை உதவி இயக்குநர் மீராபாய் பேசியது:

விவசாய உற்பத்தியை இருமடங்காகவும், விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காகவும் பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கம். பாரம்பரிய சிறு தானியப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்தி தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்வதுடன் விவசாய உற்பத்தியையும், வருமானத்தையும் உயர்த்திக் கொள்ள வேண்டும் என்றார்.

## கெங்கரை, ஒன்னட்டியில் உழவர் பெருவிழா

கோத்தகிரி அருகில் உள்ள கெங்கரை மற்றும் ஒன்னட்டி கிராமங்களில் உழவர் பெருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கெங்கரை ஊராட்சி, தொட்டமனைஹட்டியில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சித் தலைவர் கண்ணகி தலைமை வகித்தார். ஊர்த் தலைவர் ரவி முன்னிலை வகித்தார். கோத்தகிரி துணை வேளாண்மை அலுவலர் பி.ரமேஷ் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத் தலைவர் மனோகரன் கலந்து கொண்டார்.

தேனாடு ஊராட்சி, ஒன்னட்டி கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்ற விழாவுக்கு ஊர்த் தலைவர் எஸ்.கே.மாதன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக தேனாடு ஊராட்சித் தலைவர் ஸ்டீபன் கலந்து கொண்டார்.

கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குநர் கா.ராஜேந்திரன் தோட்டக்கலை திட்டங்கள் குறித்து விளக்கினார். விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டன. உதவி வேளாண்மை அலுவலர்கள் பி.பாபு, கோபால் ஆகியோர் நன்றி கூறினர்.

## உழவர் பெருவிழாவில் நலத்திட்ட உதவி: ஆட்சியர் வழங்கினார்

போளூர் வேளாண் துறை சார்பில் பால்வார்த்துவென்றான் ஊராட்சியில் வியாழக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் விஜய் பிங்ளே வழங்கினார்.

விழாவில், வேளாண்மை இணை இயக்குநர் சக்கரவர்த்தி வரவேற்றார். வேளாண்மை உயர்மட்டக்குழு உறுப்பினர் வேட்டவலம் மணிகண்டன் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தலைமை வகித்துப் பேசினார்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் 20 மகளிர் சுயஉதவிக்குழு மகளிர்களுக்கு ரூ.4 லட்சத்து 80 ஆயிரமும், நபார்டு வங்கி மூலம் ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்தையும் ஆட்சியர் வழங்கினார். மேலும் விவசாயிகளுக்கு பவர்டில்லர், விசைதெளிப்பான்களையும் ஆட்சியர் வழங்கினார்.

போளூர் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணகி, வேளாண்மை உதவி அலுவலர் சித்ரா, வட்டாட்சியர் காமராஜ், நபார்டு வங்கி பொதுமேலாளர் சுதர்சன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் பிச்சாண்டி, செல்வி மோகன்குமார், ராதிகா ரமேஷ் மற்றும் விவசாயிகள், மகளிர் சுயஉதவிக் குழுவினர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### விலையில்லா ஆடுகளை நன்கு பராமரித்தால் ரூ.5 ஆயிரம் பரிசு

விலையில்லா ஆடுகளை நன்கு பராமரித்து வளர்த்து வரும் விவசாயிகளுக்கு தமிழக அரசு சார்பில் ரூ.5 ஆயிரம் பரிசாக வழங்கப்படும் என கால்நடை மருத்துவர் கா.சங்கர் தெரிவித்தார்.

செய்யாறை அடுத்த கொருக்கை கிராமத்தில் உழவர் பெருவிழா வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பேசும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஹேமாலினி சின்னப்பா தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, வேளாண்மை பொறியியல் துறை அலுவலர் ரவி ஆகியோர் அரசின் வேளாண் திட்டங்கள் குறித்துப் பேசினர்.

வேளியநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் விஜய், துணைத் தலைவர் மகாலட்சுமி, விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மீன்வளர்ப்புக்கு மானிய விலையில் பல்நோக்கு பண்ணைக் குட்டை

விவசாய நிலங்களில் மீன்வளர்க்க மானிய விலையில் பல்நோக்கு பண்ணைக் குட்டை அமைத்துத்தர உள்ளது. இதற்கு தகுதியான நாமக்கல் மாவட்ட விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் வெளியிட்டுள்ள செய்தி:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் சொந்தமாக 2500 சதுரஅடி பட்டா நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு மீன்குஞ்சு அல்லது மீன்வளர்க்க மானிய விலையில் பல்நோக்க பண்ணை அமைத்தரப்பட உள்ளது.

இத்திட்டத்தின்படி, நடப்பு நிo்தியாண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மீன்குஞ்சுகள் மற்றும் மீன்தீவனம் கொள்முதல் செய்திட மொத்தத்தொகை ரூ.46000ல் 50 சதவீத மானியமாக ரூ.23000 பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

பல்நோக்கு பண்ணை குட்டை அமைக்கப்பட உள்ள இடம், மீன் வளர்க்க தகுதியானதாகவும், நீர்வளம் மற்றும் களிமண் நிறைந்த நிலமாகவும் இருக்க வேண்டும். அதிகளவில் விவசாயிகள் விண்ணப்பித்தால் தேவைக்கும், தகுதிக்கும் ஏற்ப பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். விருப்பமுள்ள விவசாயிகள் மேட்டூர் அணைப்பகுதியிலுள்ள மீன்வள உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) அலுவலகத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு அந்த அலுவலகத்தை 04298 244045 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பெறலாம் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பழக்கன்றுகள், மரச்செடிகள் விற்பனைக்கு தயார்

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பழக்கன்றுகள் மற்றும் மரச்செடிகள் விற்பனைக்கு தயாராக வைக்கப் பட்டுள்ளன.இதுகுறித்து, வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் பி.மோகன் விடுத்துள்ள செய்தி:

வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பங்கனப்பள்ளி, அல்போன்சா இமாம்பசந், பெங்களூரா, சேலம் பெங்களூரா, நீலம், மல்லிகை ரக மா பழக்கன்றுகளும், கமலா ஆரஞ்சு, சாத்துக்கொடி, நாரத்தை, எலுமிச்சை, சீத்தாப்பழம், நெல்லி ரகங்கள், மற்றும் பலா (ரகங்கள் முட்டம்பலா, பால் இல்லாத பலா, சிங்கப்பூர் பலா) ஆகிய பழக்கன்றுகளும், மரச்செடிகளான தேக்கு, மலைவேம்பு, கொன்றை, பூவரசு, இலுப்பை மற்றும் பூச்செடிகளான இட்லிபூ, நந்தியாவட்டை, பொன்அரளி, குரோட்டன்ஸ் போன்றவைகளும் நடவு செய்வதற்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு தயாராக உள்ளன

நடவு செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் நாமக்கல் மோகனூர் சாலையிலுள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் முழுத்தொகையை செலுத்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04286 -266345, 266244 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

### சூளகிரியில் சூறைக்காற்று: 20 வீடுகள், 4 ஆயிரம் வாழை மரங்கள் சேதம்,

சூளகிரி மற்றும் சுற்றுப் புற கிராமங்களில் புதன்கிழமை இரவு சூறைக்காற்றுடன் ஆலங்கட்டி மழைப் பெய்ததால் 4 ஆயிரம் வாழை மரங்கள் தேசமடைந்தன. மேலும் 20 வீடுகளில் ஓடுகள்

உடைந்து சேதமடைந்தன. சூளகிரி பார்த்தகோட்டா, காமன்தொட்டி, கொம்மேப்பள்ளி, சினிகிரனப்பள்ளி உளளிட்ட 30 கிராமங்களில் பல்த்த காற்றுடன் சூறைக் காற்று வீசியது.

இதில் பாதகோட்டா கிராமத்தில் வீராரெட்டி பயிர் செய்திருந்த 4000 வாழை ம்ரங்கள்கள் அறுவடைக்கு தயார் நிலையில இருந்தன. இந்த வாழை மரங்கள் அனைத்தும் காற்றில் சாய்தன. இதனால் அவர் ரூ.10 லட்சம் செலவில் செய்திருந்த சொடடு நீர்ப் பாசன கருவிகள் தேசமடைந்தன.

மேலும் அதேப் பகுதியில் கேழ்வரகு, நெல், தென்னை, உள்ளிட்ட பயிர்கள் தேசமடைந்தன.

மேலும் கொம்பேப்பள்ளி ஊராட்சி சினிகிரனப்பள்ளி கிராமத்தில் 20 வீடுகள் தேசமடைந்தன.

இதனால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். வீட்டில் இருந்த இரண்டு குழந்தைகளுக்கு லேசான காயம் ஏற்பட்டது.

### சூறைக்காற்றில் முறிந்து விழுந்த வாழை மரங்கள்

திருச்சி மாவட்டம் முசிறி, தொட்டியம், காட்டுப்புத்தூர், அந்தநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை வீசிய சூறைக்காற்றில் சுமார் 100 ஹெக்டேர் அளவிலான வாழை மரங்கள் முறிந்து சேதமடைந்துள்ளன.

கடுமையான வெயில் அடித்து வரும் நிலையில், புதன்கிழமை இரவும், வியாழக்கிழமை மாலையிலும் திருச்சி மாவட்டத்தின் சில இடங்களில் லேசான மழையுடன் சூறைக்காற்று வீசியது.

இந்த காற்றில் முசிறி, தொட்டியம், காட்டுப்புத்தூர், அந்தநல்லூர், சிறுகமணி, பெருகமணி, குழுமணி, கோப்பு, புலியூர் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் முறிந்து விழுந்தன.

ஏற்கெனவே தண்ணீர் தட்டுப்பாடு, போதிய விலையின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள வாழை விவசாயிகளுக்கு இந்த சூறைக்காற்று மேலும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பகுதிகளில் மட்டும் சுமார் 100 ஹெக்டேர் பரப்பளவிலான மரங்கள் சாய்ந்து விழுந்துள்ளதாகவும், இதுகுறித்து கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தோட்டக் கலைத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

### காட்டாகரத்தில் உழவர் திருவிழா

அரியலூர் மாவட்டம், ஜயங்கொண்டம் அருகேயுள்ள காட்டாகரத்தில் வேளாண் துறை சார்பில் உழவர் திருவிழா வியாழக்கிழமை நடைபெற்றது.

காட்டகரம் ஊராட்சித் தலைவர் அன்பழகன் தலைமை வகித்தார். துணை வேளாண் அலுவலர் பொய்யாமொழி முன்னிலை வகித்தார்.

வேளாண் அலுவலர் நா. கலைச்செல்வி விவசாயிகளுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள், பயிர் பாதுகாப்பு குறித்துப் பேசினார்.

வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை அலுவலர் நல்லகுமார் விளைபொருட்களை தரம் பிரித்து விற்பதன் மூலம் அதிக லாபம் பெற முடியும் என்பதை விளக்கி, செயல்விளக்கமும் அளித்தார்.

விழாவில் நடைபெற்ற இலவச கால்நடை மருத்துவ முகாமில் உதவி கால்நடை மருத்துவர் கலைச்செல்வன் பங்கேற்று குடற்புழு நீக்கம், சினைப் பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், ஆண்மை நீக்கம் ஆகிய சிகிச்சைகளை அளித்தார்.

வேளாண் பொறியியல் துறை இளநிலைப் பொறியாளர் கலைமணி, தோட்டக் கலைத்துறை உதவி அலுவலர் பெருமாள், மீன்வளத் துறை அலுவலர் ராஜசேகர், அட்மா திட்ட வேளாண் அலுவலர் முருகன், உதவி வேளாண் அலுவலர்கள் கோவிந்தராஜ், ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர். உதவி வேளாண் அலுவலர் ஆதிநாராயணன் நன்றி கூறினார்.

### கூட்டுறவுச் சங்க காய்கறிக் கடை திறப்பு

அரியலூர் ரயில் நிலையச் சாலையில், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் சார்பில் காய்கறிக் கடை திறப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

முதல் விற்பனையைத் தொடக்கி வைத்த கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் மு. முருகன் பேசியது:

காய்கறிகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தக் கடை தொடங்கப்பட்டுள்ளது. இங்கு அரியலூர் மாவட்டத்தில் சாகுபடியாகும் காய்கறிகளை விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் செய்வதோடு, இங்கு கிடைக்காத காய்கறிகளை தஞ்சாவூர், திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் பெறப்பட்டு பொதுமக்களுக்கு தரமான, குறைவான விலையில் விற்பனை செய்யப்படும். மேலும் ரூ. 200-க்கும் அதிகமாக காய்கறி தேவைப்படும் வாடிக்கையாளர்களுக்கு, அவர்களது வீடுகளுக்கு காய்கறிகளை கொண்டு செல்லத்

திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அரியலூர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் குறைந்த விலையில் தரமான காய்கறிகளைப் பெற்றுப் பயன் பெறலாம் என்றார் அவர்.

துணைப் பதிவாளர் பா. அருளரசு, செயலாட்சியர் கே.வி. ராஜேந்திரன், செயலர் எம். சுப்பிரமணியம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இன்று உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (ஏப். 26) உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்கள் குறித்த பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் பி. எம்பெருமாள் வெளியிட்ட தகவல்:

புதுக்கோட்டை வட்டாரத்தில் குப்பையன்விடுதி, கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நெப்புகை, திருவரங்குளம் வட்டாரத்தில் அரையப்பட்டி, பாத்தம்பட்டி, கல்லாங்குடி, கறம்பக்குடி வட்டாரத்தில் மைலான்கோன்விடுதி, மருதகோன்விடுதி, அறந்தாங்கி வட்டாரத்தில் செங்கமாரி, சிலட்டுர், சிறுநாட்டான்வயல், ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் கரூர், குமுலூர், கோனோரியேந்தல், மணமேல்குடி வட்டாரத்தில் மணமேலகுடி, ஏனாதி, ஆவுடையார்பட்டினம், திருமயம் வட்டாரத்தில் வெங்களூர், அரிமளம் வட்டாரத்தில் குறுங்கூர், பொன்னமராவதி வட்டாரத்தில் தூத்தூர் (மணப்பட்டி), அன்னவாசல் வட்டாரத்தில் தளிஞ்சி, கதவம்பட்டி, விராலிமலை வட்டாரத்தில் சூரியூர், குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் ஒடுகம்பட்டி ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெறுகிறது.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 24.15 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 24.15 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 126 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## "தென்னை விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்

திருவாரூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தென்னை விவசாயிகளுக்கும் நிவராணம் வழங்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் விவசாயிகளின் முறையீடு:

ஜி. சுந்தரமூர்த்தி: நிகழாண்டு நெல் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கியது போல பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும். கால்நடை வளர்ப்போரை பாதுகாக்கும் வகையில் பசு மற்றும் எருமைப்பால் லிட்டருக்கு ரூ.5 மற்றும் ரூ.8 உயர்த்தி வழங்க வேண்டும். கறவை மாடுகள் வாங்க மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டும்.

ராமகிருஷ்ணன்: சொரக்குடி, நாககுடி, குவளைக்கால், ஓமக்குளம், மூலங்குடி பகுதிகளின் சேதமடைந்துள்ள பாசன வாய்க்கால் மதகுகளை சீரமைக்க வேண்டும். வண்டாம்பாலை வெட்டாறு ரெகுலேட்டரை போர்க்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டும்.

ஆட்சியர் சி. நடராசன்: நிலத்தடி நீரைப் பாதுகாத்து சேமிக்கும் வகையில் பண்ணைக்குட்டைகள் அமைக்க அரசு முழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. விவசாயிகள் பெருமளவில் பண்ணைக்குட்டை அமைக்க முன்வர வேண்டும். மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கூட்டத்தில் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கணேசன், துணை இயக்குநர் மயில்வாகனன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

## இலவச கறவைப் பசுக்களுக்கான மருத்துவ முகாம் இன்று தொடக்கம்

தூத்துக்குடி மாவட்டத்தில் இலவச கறவை பசுமாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை (ஏப்ரல் 26) தொடங்கி இரண்டு நாள்கள் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழக அரசு ஏழை மக்களுக்கு இலவச கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை 1189 கறவை பசுக்களும், 23 ஆயிரம் வெள்ளாடுகளும் வழங்கப்பட்டு உள்ளன.

கால்நடை பராமரிப்புத் துறை கால்நடை உதவி மருத்துவர்கள், அலுவலர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள திட்ட கிராமங்களில் மாதம்தோறும் சிறப்பு முகாம்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் தூத்துக்குடி மாவட்டத்தில் விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கிய கிராமங்களில் சிறப்பு முகாம் வெள்ளிக்கிழமை (ஏப்ரல் 26) தொடங்கி இரண்டு நாள்கள் நடைபெறுகிறது. இந்த முகாம்களில் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் தங்கள் கால்நடைகளை தவறாமல் கொண்டு வந்து கால்நடை மருத்துவரிடம் காண்பித்து, கால்நடைகளின் நலன் காக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றார் அவர்.

## மின்சாரத்தை உறிஞ்சக் கூடாது: விவசாயிகளுக்கு அரசு வேண்டுகோள்

விவசாயிகள் மின்சாரத்தை உறிஞ்சக் கூடாது என்று மின்சாரத் துறை அமைச்சர் நத்தம் ஆர்.விஸ்வநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப் பேரவையில் வியாழக்கிழமை கேள்வி நேரத்தின்போது இதுதொடர்பாக கேள்வி எழுப்பிய அதிமுக எம்.எல்.ஏ. சி.விஜயபாஸ்கருக்கு (விராலிமலை) பதிலளித்து அமைச்சர் விஸ்வநாதன் அளித்த பதில்:

விவசாயிகளின் பயன்பாட்டுக்காக மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட நேரத்தை தவிர மற்ற நேரங்களில் இருமுனை மின்சாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால், விவசாயிகள் இந்த இருமுனை மின்சாரத்தை மும்முனை மின்சாரமாக மாற்றும் கருவிகளைப் பொருத்தி மின்சாரத்தை உறிஞ்சுகின்றனர்.

இவ்வாறு மின்சாரம் உறிஞ்சப்படுவதால் மின்பளு தாங்காமல் மின் மாற்றிகள் பழுதடைந்து விடுகின்றன. ஒரு மின்மாற்றி 15 முதல் 20 நாள்கள் கூடத் தாங்குவதில்லை. மின்சாரத்தை உறிஞ்சுவது சட்டப்படி தவறு என்றாலும் விவசாயிகள் என்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. ஆனாலும், மும்முனை மின்சாரம் வழங்கும் நேரத்தில் மட்டுமே விவசாயிகள் அதைப் பயன்படுத்தி ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றார் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.04.2013 A.M**

---

## ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானியே எம்.எஸ். சுவாமிநாதன் பேச்சு

கன்னிவாடி:"ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானியே'என வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் பேசினார்.கசவனம்பட்டி அருகே கிட்டம்பட்டியில் வட்டார வளம்குன்றா வேளாண் மைய திறப்புவிழா நடந்தது. மையத் தலைவர் ராஜசேகர் தலைமைவகித்தார்.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் கட்டடத்தை திறந்து வைத்துபேசுகையில்," தற்போது இந்திய மக்கள்தொகை 120 கோடியாக உள்ளது. 2030ல் 150 கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இயற்கையின் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப, வேளாண்துறை பாதிப்புகளை சந்தித்து வரும் சூழலில், உணவு பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போது உணவு பஞ்சம் இல்லை. பணப்பஞ்சம் தான் உள்ளது. எனவே இதற்கேற்ப வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது முக்கியம். ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானி என்பதை அறிவு புரட்சியால் மட்டுமே உணர்த்த முடியும்,' என்றார். விழாவில், முன்னோடி வங்கி மேலாளர் அர்ஜூனன்முத்தையா, வேளாண்மை இணை இயக்குனர் சம்பத் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

## பயிர் காப்பீடு திட்டத்தில் வெற்றிலை சேர்க்கப்படுமா

பெரியகுளம்:மூலிகை பயிரான வெற்றிலையை, பயிர்காப்பீடு திட்டத்தில் சேர்த்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

தேனி மாவட்டத்தில், வடுகபட்டி, ஜெயமங்கலம், சில்வார்பட்டி, சின்னமனூர், போடி, கூடலூர், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலைக் கொடிக்கால் விவசாயம் நடக்கிறது.

இங்கு விளையும் வெற்றிலை மாநிலத்தில் பல பகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

வெற்றிலை ரகங்களான வெள்ளை, பச்சை, கற்பூரம், அந்தியூர், கணியூர், சிறகுமணி1, சிறகுமணி2 உட்பட பல ரகங்கள் உள்ளன. விவசாயிகள் தரமான விதைக் கொடிகளே தேர்வு செய்கின்றனர். இருந்தபோதிலும், சாதரணமாக விதைக் கொடிகள் வழியாக தீச்சல், வாடல், ஈரப்புள்ளி மற்றும்

கருந்தாள் போன்ற நோய்கள் பரவியுள்ளது.

வெற்றிலையில் பூச்சி மற்றும் நூற்புழு நோய்களால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வெற்றிலை விவசாயிகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

மூலிகை பயிரான வெற்றிலையை, பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்த்து, தமிழக அரசு நிவாரணம் வழங்க வேண்டும், என வடுகபட்டி வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கிருஷ்ணகிரியில் சூறை காற்றுக்கு வாழை மரங்கள் சாய்ந்து சேதம்

ஓசூர்: சூளகிரி அருகே நேற்று முன்தினம் சூறைகாற்றுடன் பெய்த மழைக்கு, வாழை மரங்கள் சாய்ந்தன. மலர் சாகுபடி பசுமை குடோன்களும், சூறைக்காற்றில் சேதமடைந்ததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த சில நாளாக கோடை மழை விட்டு, விட்டு பரவலாக பெய்து வருகிறது. மாவட்டத்தில் ஓசூரை தவிர, சூளகிரி, கிருஷ்ணகிரி, தேன்கனிக்கோட்டை, உத்தனப்பள்ளி, தளி மற்றும் ஊத்தங்கரை பகுதியில் நல்ல மழை பெய்து வருகிறது.நேற்று முன்தினம் சூளகிரி, உத்தனப்பள்ளி, காமன்தொட்டி சுற்றுவட்டார கிராமங்களில் இடி, மின்னல், சூறைகாற்றுடன் கன மழை பெய்தது. காற்றில், சூளகிரி, உத்தனப்பள்ளி பகுதியில் அறுவடைக்கு தயாராக இருந்த வாழை மரங்கள், மலர் சாகுபடி பசுமை குடோன்கள், தக்காளி, பீன்ஸ் செடிகள் நாசமடைந்துள்ளன.சூளகிரி அடுத்த பார்த்தக்கோட்டை கிராமத்தில், விவசாயி வீராரெட்டிக்கு சொந்தமான, 10 ஏக்கரில் ஆறு ஏக்கரில் ரோபஸ்டா, நான்கு ஏக்கரில் வாழை சாகுபடி செய்திருந்தார். சூறைகாற்றில், வாழை மரங்கள் சாய்ந்து சேதமடைந்தன.பார்த்தக்கோட்டா, உத்தனப்பள்ளி மற்றும் சூளகிரி சுற்றுவட்டார கிராமங்களில் விவசாயிகள் சாகுபடி செய்திருந்த வாழை மரங்கள், பசுமை குடோன்கள் சாய்ந்து கீழே விழுந்தன. உத்தனப்பள்ளி அடுத்த டி.குருபரப்பள்ளி முனிராஜூக்கு சொந்தமான, பசுமை குடோன் முற்றிலும் சாய்ந்து கீழே விழுந்தது. பசுமை குடோனில் சாகுபடி செய்திருந்த பீன்ஸ் செடிகள் நாசம் அடைந்தது."சேதமான வாழை மரங்களுக்கும், பசுமை குடோன்களுக்கும் உரிய இழப்பீடு தொகை அரசு வழங்கிட வேண்டும்' என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சி: திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ வெளியிட்ட அறிக்கை:திருச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், ஏப்ரல், 26ம் தேதி காலை, 10.30 மணிக்கு திருச்சி கலெக்டர் அலுவலக கூட்டமன்றத்தில் நடக்கிறது. விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று,

நீர்ப்பாசனம், வேளாண், இடுபொருட்கள், கடனுதவிகள் குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

### மருதையாறு நீர்த்தேக்கம் அறிவிப்பு முதல்வருக்கு விவசாயிகள் நன்றி

பெரம்பலூர்: மருதையாறு நீர்த்தேக்கம் அமைக்க அறிவித்ததற்காக தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் கடிதத்தை அனைத்து விவசாயிகள் சங்கத்தினர் பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமதுவிடம் கொடுத்தனர்.பெரம்பலூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் நடந்தது.கூட்டத்தில் அனைத்து விவசாயிகள் சங்கத்தினர் மருதையாறு நீர்த்தேக்கம் அமைக்க அறிவித்ததற்காக தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் கடிதத்தை பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமதுவிடம் அளித்தனர்.அதில் தெரிவித்துள்ளதாவது:பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகாவில் உள்ள மருதையாற்றில் மூங்கில்பாடி ஆறு, மருதையாறு சேருமிடத்தில் கொட்டரை அருகே மருதையாறு நீர்த்தேக்கம் கட்டுவதற்கு, 108 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தமைக்கு தமிழக முதல்வர் மற்றும் மாவட்ட நிர்வாகத்துக்கும் அனைத்து விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.தற்போது மானாவாரி பயிர்களையே நம்பி உள்ள அப்பகுதி மக்கள், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், இருபோக சாகுபடி செய்ய முடியும். நிலத்தடி நீர் மட்டம் உயரும், குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைக்கும். மருதையாற்றில் ஆண்டு சராசரி மழைநீர், 2,000 மில்லியன் கனஅடி ஆக உள்ளது. இதில், 200 மில்லியன் கன அடி தண்ணீர் மட்டுமே அணையில் சேகரித்து வைக்க முடியும். மீதமுள்ள, 1,800 மில்லியன் கன அடி தண்ணீர் ஆற்றிலேயே விடப்படும். ஆகையால், மருதையாறு நீர்த்தேக்கத்தின் கீழ்பகுதியில் எவ்வகையான பாதிப்புகளும் ஏற்படாது.மருதையாறு நீர்த்தேக்கத்திட்டத்திற்கு கொட்டரை கிராமத்திலிருந்து, 464 ஏக்கர் நிலமும், ஆதனூர் கிராமத்திலிருந்து, 180 ஏக்கர் நிலமும் எடுக்கப்பட உள்ளது. இந்த நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகள் சிறு, குறு விவசாயிகள் ஆவர். இவர்களுக்கு வேறு நிலங்களோ, சொத்துக்களோ இல்லை.இந்த விவசாயிகளுக்கு அவர்களது நிலத்திலிருந்து வரும் வருமானம்தான் வாழ்வாதாரமாக உள்ளது. எனவே, தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் கையகபடுத்தப்படும் நிலத்திற்கு ஏக்கருக்கு ஐந்து லட்சம் ரூபாய் நஷ்ட ஈடும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பசுமை வீடுகளும், சாகுபடி செய்வதற்கு பாசன வசதியோடு கூடிய நிலமும் வழங்க வேண்டும்.இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடிதத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட செயலாளர் செல்லதுரை (மா.கம்யூ), வேணுகோபால் (இ.கம்யூ),

தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ராஜாசிதம்பரம், விவசாய சங்க பிரதிநிதிகள் ஜெயராமன், நீலகண்டன், ராஜேந்திரன், முருகேசன், ராமசாமி, ராமலிங்கம், வரதராஜன், சதாசிவம் ஆகியோர் கையெழுத்திட்டு, கலெக்டர் தரேஷ்அஹமதுவிடம் அளித்தனர்.

### உழவர் பெருவிழா

சங்கராபுரம்: சங்கராபுரம் வட்டம் கல்வராயன்மலையைச் சேர்ந்த சேராப்பட்டில் தோட்டக்கலைத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது.கல்வராயன்மலை ஒன்றிய சேர்மன் வெள்ளி தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர் நாகம்மாள், ராமர், அம்பிகா முன்னிலை வகித்தனர். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கனகலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் ஆப்பிள், அண்ணாமலை பேசினர்.தோட்டக்கலைத்துறை சார்பில் உள்ள அரசு திட்டங்கள், மானியம் குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் ரவி, சரவணன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சாமுண்டீஸ்வரி விளக்கினர்.

### நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால்....கருகும் பயிர்கள் இறவை பாசன விவசாயம் கேள்விக்குறி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கோடை வெயில் வாட்டி எடுத்து வரும் நிலையில், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, இறவை பாசன பகுதியில் பயிர்கள் கருகி வருகிறது.வெப்ப மண்டல பகுதியான தர்மபுரி மாவட்டத்தில், ஆண்டுதோறும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையின் போதும், மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்களில் சேமிக்கப்படும் நீர் மூலம் மாவட்டம் முழுவதும் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.கடந்தாண்டு பருவமழை பொய்த்து போன நிலையில், மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் ஆதாரங்கள் அனைத்தும் வறண்டு போனது. கடந்த பிப்ரவரி மாதம் முதல் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு தலை தூக்க துவங்கியது. கடந்த இரண்டு மாதமாக வெயில் வாட்டி எடுத்து வரும் நிலையில் மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீரும் வறண்டு, போர்கள், கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.எந்தாண்டும் இல்லாத வகையில், கோடை மழையும் இது வரையில் குறிப்பிட்டு சொல்லும்படியாக பெய்யாத நிலையில், இறவை பாசனத்தை நம்பியிருந்த விவசாயிகளும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததை தொடர்ந்து பயிர்களை காக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.பென்னாகரம் தாலுகா பகுதியில் நேற்று முன்தினம் பரவலாக பெய்த மழையால் அப்பகுதியில் கோடை வெயில் தாக்கம் குறைந்த போதும், கோடை காலத்தை சமாளிக்கும் வகையில் நீர் தேவைகள் பூர்த்தி அடையாத நிலை நீடித்து வருகிறது.மாவட்டத்தில் ஒரு சில கிணறுகளில் மட்டும் ஐந்தடி முதல் ஆறு அடி வரையில் தண்ணீர்

இருந்த போதும், மின் வெட்டு காரணமாக நீர் பாய்ச்ச முடியாத நிலையுள்ளது. ஒரு சில பெரிய விவசாயிகள் ஆயில் மோட்டார் மூலம் கிணறுகளில் தண்ணீர் ஊற, ஊற இறைத்து பாசனம் செய்து வருகின்றனர்.தர்மபுரி, காரிமங்கலம், பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதியில் இறவை பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் அனைத்தும் கருகி வருகிறது. கரும்பு விவசாயிகள் நடவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குச்சி கிழங்கு மற்றும் எண்ணெய் வித்து பயிர்களுக்கு விவசாயிகள் வெளியில் இருந்து தண்ணீர் லாரிகளில் வாங்கி வந்து வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சி வருகின்றனர்.இறவை பாசன பகுதியில் சொட்டு நீர் பாசன முறையில் நீர் மேலாண்மை செய்யும் விவசாய பகுதிகளிலும் கிணறுகளில் தண்ணீர் இன்றி வறண்டு போனதால், மாதம் ஒரு முறை மட்டுமே நீர் பாய்ச்சும் நிலை ஏற்பட்டுள்ளது. கோடை வெயில் ஒரு பக்கம் குறையாமல் வாட்டி எடுத்து வருவதால், ஒவ்வொரு நாளும் நிலத்தடி நீர் மட்டம் பாதாளத்துக்கு போய் வருகிறது.இருக்கும் பயிர்களை பாதுகாக்க முடியாத நிலையில் சித்திரை பட்டத்தில் வழக்கமாக சில பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய் வித்து பயிர்களையும் விவசாயிகள் சாகுபடி செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர். இதே போல் வீடுகளில் உள்ள போர்களிலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.தர்மபுரி நகரப்பகுதி மற்றும் அதை சுற்றியுள்ள பஞ்சாயத்துப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் இல்லாததால், குடியிருப்பு பகுதிகளில் மொத்தமாக லாரிகளில் தண்ணீர் வாங்கி பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. கோடை மழை பெய்தால் மட்டும் குடிநீர் மற்றும் விவசாயத்துக்கான நீர் தேவை பூர்த்தியாகும் நிலையுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

26.04.2013 A.M

## வறட்சியால் வரத்து குறைவு காய்கறி விலை 50% உயர்வு



சென்னை : கடும் வறட்சி காரணமாக காய்கறி விலையில் தினமும் ஏற்ற இறக்கம் காணப்படுகிறது. கடந்த மாதத்தோடு ஒப்பிடும்போது 50 சதவீத அளவுக்கு காய்கறி விலை உயர்ந்துள்ளதால் அதிர்ச்சியடைந்துள்ள பொதுமக்கள், தமிழக அரசு அறிவித்த பசுமை அங்காடிகளை விரைவில் திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு பருவ மழை முற்றிலுமாக பொய்த்தது. கர்நாடக மாநிலம் காவிரியில் உரிய நீரை தராததால் டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் முற்றிலுமாக கருகி, விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். நடப்பாண்டிலும் பருவ மழைக்கான அறிகுறி காணவில்லை. பருவ மழை இல்லாததாலும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததாலும் பயிர் சாகுபடி மட்டுமல்லாமல், காய்கறி சாகுபடியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்து காய்கறி விலையில் நிலையற்ற தன்மை ஏற்பட்டுள்ளது. தினமும் ஒரு விலை என்று கண்ணாமூச்சி காட்டுவதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். காய்கறி விலையை பொறுத்தவரை வரத்துக்கு ஏற்ப நிர்ணயம் செய்யப்படும். கடந்த காலங்களில் நாளொன்றுக்கு 250 லோடுகள் வரை காய்கறிகள் வந்தது. பருவ காலங்களில் 500 லோடுகள் கூட வரும். ஆனால் தற்போது கடுமையான வறட்சி இருப்பதால் காய்கறி விளைச்சல் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தற்போது மொத்தமே 180

லோடுகள் மட்டுமே காய்கறிகள் வருகிறது.இவ்வாறு வரத்து குறைந்துள்ளதால் காய்கறி விலையில் நிலையற்ற தன்மை காணப்படுவதால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் தமிழக அரசு அறிவித்தபடி பசுமை அங்காடி காய்கறி கடைகளை விரைவில் திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இதில் கடந்த மாதத்தில் பீன்ஸ் விலை கிலோ ரூ.30ஐ தாண்டவில்லை. ஆனால் இந்த மாதம் கிலோ ரூ.70 அல்லது ரூ.60 என்ற நிலையிலேயே உள்ளது. அதேபோல பல காய்களின் விலையும் கடந்த மாதத்தோடு ஒப்பிடும்போது 50 சதவீத அளவுக்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய விலை (கிலோவுக்கு)

பீன்ஸ் ரூ.60

அவரை ரூ.45

உருளை ரூ.18

சேப்பன் ரூ.30

கேரட் ரூ.30

முருங்கை ரூ.15

புடலை ரூ.15

காலிபிளவர் ரூ.15

தக்காளி ரூ.25

வெங்காயம் ரூ.40

வெண்டை ரூ.20

கோவக்காய் ரூ.15

கொத்தவரை ரூ.17

கோஸ் ரூ.10

சேனை ரூ.15

கத்தரி ரூ.20

பீட்ரூட் ரூ.18

சவ்சவ் ரூ.25

நூல்கோல் ரூ.18

பல்லாரி ரூ.18

ப.மிளகாய் ரூ.25

இன்றைய வேளாண் செய்திகள்

26.04.2013 A.M

## பருவநிலை மாற்றம், மாறுபட்ட சூழ்நிலைக்கேற்ப விளைபொருட்களை உற்பத்தி செய்தால்தான் லாபம் கிடைக்கும் விழிப்புணர்வு முகாமில் விவசாயிகளுக்கு அறிவுரை

நாமக்கல்

''பருவநிலை மாற் றம், மாறுபட்ட சூழ் நிலைக்கேற்ப விளை பொருட்களை உற்பத்தி செய்தால்தான் லாபம் கிடைக்கும்'' என விழிப் புணர்வு முகாமில் விவ சாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

**விழிப்புணர்வு முகாம்**

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் சிறு விவசாயிகள், வேளாண் வணிக நட்பமைப்பு முன் னோடி விவசாயிகள், தொழில் முனைவோர்களுக்கான விழிப் புணர்வு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் கலெக்டர் ஜெகநாதன் பேசிய தாவது:

வேளாண் வணிக நட் பமைப்பு வேளாண் மற்றும் வேளாண் வணிக செயல் திட்டங்களை சிறு விவசாயி களிடையே சென்றடையச் செய்ய வேண்டும். இதற்காக தொழில்நுட்ப பயிற்சியை அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுடன் இணைந்து விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும். மிக முக்கியமாக வேளாண் பெருமக்கள் உற் பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்த ஏதுவாக உள் ளுர் விற்பனை மற்றும் ஏற்று மதியை மேம்படுத்த ஆவண செய்ய வேண்டும். விவசாய சமூகத்தினரை ஒருங் கிணைத்து வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில் களை முனைப்புடன் செய லாக்க உதவிட வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கிற உரிமை விவசாயிகளிடம் ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் லாபகரமான முறையில் பொருட்களை விற்பனை செய்ய முடியும். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை எவ்வாறு வணிகம் செய்வது என்பதை நன்கு தெரிந்து கொள்வதற்கும் இந்த அமைப்பு துணை நிற்க வேண்டும்.

**லாபம் கிடைக்கும்**

பல்வேறு திட்டங்கள் அரசின் மூலம் செயல்படுத்தப் பட்டாலும், ஒவ்வொரு திட் டங்களுக்கும் ஒரு வரைமுறை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. குறிப்பாக சில திட்டங்கள் மூலம் கடன்கள் மட்டும் பெறமுடியும். சில திட்டங்கள் மூலம் மான்யத்துடன் கடன் பெறமுடியும். சில திட்டங்கள் மூலம் வட்டியில்லா கடன் பெறமுடியும். எனவே விவசாய பெருமக்கள் எந்த திட்டங்கள் மூலம் உதவிகள் பெற்றால் அது விவசாயத்திற்கு ஏற்றதாக இருக்கும் என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். விவசாய பெருமக்கள் பருவ நிலை மாற்றத்திற்கு ஏற்பவும், மாறுபட்ட சூழ்நிலைக்கேற்ப வும், விளை பொருட்களை உற்பத்தி செய்வதை தெரிந்து கொள்ள வேண்டும். அப் போதுதான் அது லாபகரமான முறையில் அமையும். எனவே இந்த விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்ட விவசாயிகள், தொழில் முனைவோர்கள் நல்ல முறையில் இதை பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் விவசாய நிதி நிறுவனத்தைச் சார்ந்த சந்திரபிரகாஷ், முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன், உதவி பொது மேலாளர் பூவ ராகன், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) ராசமணி, வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) விஸ்வநாதன், வேளாண்மை அலுவலர் ராஜேஸ்வரி உள்பட அலு வலர்கள் பலர் கலந்து கொண் டனர்.